# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 89/மா/2025**

**நாள்: 14.07.2025**

| | | |
|---|---|---|
| L. ரவிச்சந்திரன்<br>குரோம்பேட்டை, சென்னை–44 | --- | முறையீட்டு மனுதாரர் |
| (1) ஆணையர்,<br>தாம்பரம் மாநகராட்சி<br>(2) உரிமையாளர், ஏ.வி.எம். அக்வா–<br>M/s R.S. Food & Beverages<br>சென்னை–44 | --- | எதிர்மனுதாரர்கள் |

சென்னை–44, குரோம்பேட்டை, அருள்முருகன் ராமமூர்த்தி நகர், 2வது மெயின் ரோடு, 3வது குறுக்குத் தெரு, கதவு எண் 1B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. L. ரவிச்சந்திரன் என்பவரின் 18.02.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.02.2025 அன்று பெறப்பட்டு 89/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–44, குரோம்பேட்டை, அருள்முருகன் ராமமூர்த்தி நகர், 2வது மெயின் ரோடு, 3வது குறுக்குத் தெரு, கதவு எண் 1B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. L. ரவிச்சந்திரன் என்பவரின் 18.02.2025 நாளிடப்பட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"I am writing on behalf of the residents of "Arul Murugan Ramamurthy Nagar, Chrompet to formally bring to your attention the ongoing nuisance caused by "AVM WATER PLANT" in our locality.

For the past 5 years, we have been facing several issues due to the negligent operations of the company including:

(1) Heavy pumping of Ground water for commercial purposes: Due to heavy pumping of ground water, all our residents are facing

ground water scarcity frequently and in turn are forced to buy water from outer sources.

(2) HEAVY LOADED HIGH SPEED WATER VEHICLE:

Due to high speed and rash driving of heavy loaded water vehicles from morning 5.00 a.m. till 11.00 p.m. late night, our residents mainly old age people are feeling unsafe to walk along the streets as it is only 20 feet road. Moreover, School Children's are scared to catch their school buses or Autos due to high speed.

(3) ALCOHOLIC BEHAVIOUR: Women's in our locality are scared and feeling unsafe to move/walk into the streets due to the inappropriate behaviour by the "AVM WATER PLANT" Company employees and Drivers.Moreover, neighbours to the 'AVM WATER PLANT" are facing alcoholic behaviour by the employees regularly.

(4) DISRUPTION OF STREETS: Due to high speed heavy loaded water vehicles, man holes are getting damage frequently and thereby sewerage water overflows in our streets causing bad odour and spreading of mosquitoes and fear of spreading illness which was intolerable by our residents.

(5) HEAVY USE OF ELECTRICAL POWER: Due to heavy use of electrical power by "AVM WATER PLANT" for their commercial purposes, we are getting low voltage frequently.

Despite repeated complaints to the concerned authorities at "AVM WATER PLANT", no effective action has been taken to resoluve these problems. The situation has made it difficult for residents to go about their daily lives, and in some cases, has led to health hazards and damage to public infrastructure.

We urge your department to take immediate action against closure of "AVM WATER PLANT" and ensure that they address these concerns without further delay.

We look foward to your intervention and a prompt resolution to this matter.

Thank you for your attention to this urgent matter." என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 07.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 3, உதவி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 1415/2025/எப்1, நாள் 09.05.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

“சென்னை–44, குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, செந்தில் நகர், வரதப்பிள்ளை தெரு, இலக்கம் 109/1 என்ற முகவரியில் அமைந்துள்ள AVM Aqua (Packaged Drinking Water) R.S. Food & Beverages எனும் நிறுவனத்தினை 05.05.2025ம் தேதியில் நேராய்வு செய்யப்பட்டது. மேற்படி நிறுவனக் கட்டிடம் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 (முந்தைய பல்லாவரம் நகராட்சி)–ல் கட்டட அனுமதி எண் 170/18/எப்2 நாள் 18.05.2018–ன்படி கட்டட அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் தொழிற்சாலை கட்டடத்திற்கு வரிவிதிப்பு எண் 009/023/903916–ன்படி தொழிற்சாலை பிரிவின் கீழ் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், fssai (Food Safety and Standards Authority of India) சான்று, BIS (Bureau of Indian Standards) சான்று, போர்வெல்லிருந்து தண்ணீர் எடுப்பதற்கு வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் அவர்களின் அனுமதி சான்று, 10/18 நெல்லிபேட்டை தெரு, ஜமீன் ராயப்பேட்டை, குரோம்பேட்டை என்ற முகவரியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து நீர் எடுப்பதற்கான வாடகை ஒப்பந்தம் மற்றும் மாநகராட்சி தொழில் உரிமச் சான்று பெறப்பட்டுள்ளது.

மேலும் இந்நிறுவனம் போர்வெல் குழாயிலிருந்து தண்ணீர் ஏதும் எடுக்கவில்லை. அதற்கு மாறாக அருகில் சுமார் 1000 அடி தொலைவில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து சுத்திகரிப்பு செய்து பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட உரிமம் மற்றும் சான்றுகளின் நகல்களை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.” என தெரிவித்துள்ளார்.

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.06.2025 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 25.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“குரோம்பேட்டையில் உள்ள அருள்முருகன் ராமமூர்த்தி நகர் குடியிருப்பாளர்கள் சார்பாக, எங்கள் பகுதியில் உள்ள AVM நீர் ஆலை ஏற்படுத்தும் தொடர்ச்சியான தொல்லைகளை முறைமன்ற நடுவத்திற்கு கீழ்க்கண்டவாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

**(1) வணிக நோக்கங்களுக்கான நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சுதல்:**

நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சுதல் காரணமாக எங்கள் குடியிருப்பாளர்கள் அனைவரும் நிலத்தடி நீரின் அளவு குறைந்து விட்டது. வெளியிலிருந்து தண்ணீரை வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளேன்.

**(2) அதிக வேகத்தில் அதிக நீர் ஏற்றும் வாகனங்கள்:**

காலை 5.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை 20 அடி சாலையில் அதிக வேகத்தில் தண்ணீர் ஏற்றும் லாரிகள் இயங்குவதால் குடியிருப்பாளர்கள், முக்கியமாக வயதானவர்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் தாங்கள் பள்ளி பேருந்து மற்றும் ஆட்டோக்களை பிடிக்க பயப்படுகிறார்கள். மேலும் பாதாள சாக்கடை மூடிகள் சேதமுற்று கழிவு நீர் ஓடுவதால் துர்நாற்றம் வீசுகிறது.

(3) எங்கள் பகுதி குடியிருப்பு பகுதியாகும். ஆனால், மேற்குறிப்பிட்ட AVM நீர் ஆலை வணிக பயன்பாட்டிற்காக உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

AVM நீர் ஆலையில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை புகார்கள் அளித்த போதிலும், இந்த பிரச்சனைகளை தீர்க்க எந்த பயனுள்ள நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, எங்களது குடியிருப்பாளர்களின் மேற்கண்ட பிரச்சனைகளை தாமதமின்றி நிவர்த்தி செய்து, AVM நீர் ஆலை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

6. தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3–ன் துப்புரவு ஆய்வாளர் 25.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"சென்னை–44, குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, செந்தில் நகர், வரதப்பிள்ளை தெரு, இலக்கம் 109/1 என்ற முகவரியில் அமைந்துள்ள AVM Aqua (Packaged Drinking Water) R.S. Food & Beverages எனும் நிறுவனத்தினை 05.05.2025ம் தேதியில் நேராய்வு செய்யப்பட்டது. மேற்படி நிறுவனக் கட்டிடம் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 (முந்தைய பல்லாவரம் நகராட்சி)–ல் கட்டட அனுமதி எண் 170/18/எப்2 நாள் 18.05.2018–ன்படி கட்டட அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் தொழிற்சாலை கட்டடத்திற்கு வரிவிதிப்பு எண் 009/023/903916–ன்படி தொழிற்சாலை பிரிவின் கீழ் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், fssai (Food Safety and Standards Authority of India) சான்று, BIS (Bureau of Indian Standards) சான்று, போர்வெல்லிருந்து தண்ணீர் எடுப்பதற்கு வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் அவர்களின் அனுமதி சான்று, 10/18 நெல்லிபேட்டை தெரு, ஜமீன் ராயப்பேட்டை, குரோம்பேட்டை என்ற முகவரியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து நீர் எடுப்பதற்கான வாடகை ஒப்பந்தம் மற்றும் மாநகராட்சி தொழில் உரிமச் சான்று பெறப்பட்டுள்ளது.

மேலும் இந்நிறுவனம் போர்வெல் குழாயிலிருந்து தண்ணீர் ஏதும் எடுக்கவில்லை. அதற்கு மாறாக அருகில் சுமார் 1000 அடி தொலைவில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து சுத்திகரிப்பு செய்து பயன்படுத்தி வருவதாக மேற்கண்ட நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரோடு சேதம் அடைவதை குறித்து தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கலந்து ஆலோசித்து தரமான சாலை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. மற்றொரு எதிர்மனுதாரரான M/s R.S. Food & Beverages நிறுவனத்தின் உரிமையாளர் திருமதி சங்கீதா ரமேஷ் என்பவர் 25.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, செந்தில் நகர், வரதப்பிள்ளை தெரு, கதவு எண்.109/1, என்ற முகவரியில் M/s.R.S.Food & Beverages என்ற நிறுவனம் என் கணவர் திரு.ரமேஷ் என்பவரால் துவக்கப்பட்டு, அவர் காலமான பின் என்னால் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவன கட்டிடத்திற்கு 18.05.2018 அன்று கட்டிட

அனுமதி பெறப்பட்டது. மேலும், fssai (Food Safety and Standards Authority of india) சான்று மற்றும் BIS (Bureau of Indian Standards) சான்றும் போர்வெல்லிருந்து தண்ணீர் எடுப்பதற்கு வருவாய் கோட்டாட்சியர் தாம்பரம் அவர்களின் அனுமதி சான்று, 10/18 நெல்லிப்பேட்டை தெரு, ஜமீன் இராயப்பேட்டை, குரோம்பேட்டை என்ற முகவரியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து நீர் எடுப்பதற்கான வாடகை ஒப்பந்தம் மற்றும் மாநகராட்சி தொழில் உரிமச் சான்று பெறப்பட்டுள்ளது.

எங்கள் நிறுவனத்தின் மீது மனுதாரர் குறிப்பிட்ட புகார் குறித்து லாரி ஒட்டுநர்களுக்கு அந்த பகுதியில் வசிக்கும் குடியிருப்போர்களுக்கும், குறிப்பாக பள்ளி மாணவ, மாணவியர்கள், முதியோர்கள் ஆகியோர்களை கவனத்தில் கொண்டு, கவனமுடன் வாகனம் இயக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக மாதந்தோறும் லாரி ஒட்டுநர்களுக்கு பொதுமக்களின் பாதுகாப்பு குறித்து அறிவுரை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு உறுதியளிக்கிறேன்.

8. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர்களான தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் துப்புரவு ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் M/s R.S. Food & Beverages நிறுவனத்தின் உரிமையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

குரோம்பேட்டையில் உள்ள அருள்முருகன் ராமமூர்த்தி நகர் குடியிருப்பாளர்கள் சார்பாக, தங்கள் பகுதியில் உள்ள AVM நீர் ஆலை என்ற நிறுவனத்தினால் ஏற்படும் தொடர்ச்சியான தொல்லைகளான நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சுவதின் காரணமாக தங்கள் குடியிருப்புகளின் நிலத்தடி நீரின் அளவு குறைந்து விட்டது எனவும், வெளியிலிருந்து தண்ணீரை வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகவும், காலை 5.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை 20 அடி சாலையில் அதிக வேகத்தில் தண்ணீர் ஏற்றும் லாரிகள் இயங்குவதால் குடியிருப்பாளர்கள், முக்கியமாக வயதானவர்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் தங்களுடைய பள்ளி பேருந்து மற்றும் ஆட்டோக்களை பிடிக்க பயப்படுவதாகவும், பாதாள சாக்கடை மூடிகள் சேதமுற்று கழிவு நீர் ஓடுவதால் துர்நாற்றம் வீசுவதாகவும், தங்களின் பகுதி குடியிருப்பு பகுதியாக உள்ள நிலையில், மேற்குறிப்பிட்ட AVM நீர் ஆலை வணிக பயன்பாட்டிற்காக உரிமம் வழங்கப்பட்டுள்ளதாகவும், AVM நீர் ஆலையில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை புகார்கள் அளித்த போதிலும், இந்த பிரச்சனைகளை தீர்க்க எந்த பயனுள்ள நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், எனவே, தங்களது குடியிருப்பாளர்களின் மேற்கண்ட பிரச்சனைகளை தாமதமின்றி நிவர்த்தி செய்து, AVM நீர் ஆலை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளதை மனுதாரர் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

மேற்கண்ட AVM Aqua (Packaged Drinking Water) R.S. Food & Beverages எனும் நிறுவனத்தினை நேராய்வு செய்யப்பட்டதில், மேற்படி நிறுவனக் கட்டிடம் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 (முந்தைய பல்லவபுரம் நகராட்சி)–ல் கட்டட அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதும், தொழிற்சாலை கட்டடத்திற்கு தொழிற்சாலை பிரிவின் கீழ் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேலும், fssai (Food Safety and Standards Authority of India) சான்று, BIS (Bureau of Indian Standards) சான்று, போர்வெல்லிருந்து தண்ணீர் எடுப்பதற்கு தாம்பரம் வருவாய் கோட்டாட்சியரின் அனுமதி சான்று, 10/18 நெல்லிபேட்டை தெரு, ஜமீன் ராயப்பேட்டை, குரோம்பேட்டை என்ற முகவரியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து நீர் எடுப்பதற்கான வாடகை ஒப்பந்தம் மற்றும்

மாநகராட்சி தொழில் உரிமச் சான்று பெறப்பட்டுள்ளது என்பதும், இந்நிறுவனம் போர்வெல் குழாயிலிருந்து தண்ணீர் ஏதும் எடுக்கவில்லை என்பதும், அதற்கு மாறாக அருகில் சுமார் 1000 அடி தொலைவில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து சுத்திகரிப்பு செய்து பயன்படுத்தி வருவதாக மேற்கண்ட நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், ரோடு சேதம் அடைவது குறித்து தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கலந்து ஆலோசித்து தரமான சாலை அமைக்கவும், மேற்கண்ட நிறுவனத்தால் ஏற்படும் ஒலி மாசு குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு கடிதம் அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் துப்புரவு ஆய்வாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, செந்தில் நகர், வரதப்பிள்ளை தெரு, கதவு எண்.109/1, என்ற முகவரியில் M/s.R.S.Food & Beverages நிறுவன கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதும், மேலும், fssai (Food Safety and Standards Authority of india) சான்று, BIS (Bureau of Indian Standards) சான்று, போர்வெல்லிருந்து தண்ணீர் எடுப்பதற்கு தாம்பரம் வருவாய் கோட்டாட்சியரின் அனுமதி சான்று, 10/18 நெல்லிப்பேட்டை தெரு, ஜமீன் இராயப்பேட்டை, குரோம்பேட்டை என்ற முகவரியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து நீர் எடுப்பதற்கான வாடகை ஒப்பந்தம் மற்றும் மாநகராட்சி தொழில் உரிமச் சான்று ஆகியவை பெறப்பட்டுள்ளது என்பதும், தங்கள் நிறுவனத்தின் மீது மனுதாரர் குறிப்பிட்ட புகார் குறித்து லாரி ஓட்டுநர்களுக்கு அந்த பகுதியில் வசிக்கும் குடியிருப்போர்களுக்கும், குறிப்பாக பள்ளி மாணவ, மாணவியர்கள், முதியோர்கள் ஆகியோர்களை கவனத்தில் கொண்டு, கவனமுடன் வாகனம் இயக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதும், மேலும், இது தொடர்பாக மாதந்தோறும் லாரி ஓட்டுநர்களுக்கு பொதுமக்களின் பாதுகாப்பு குறித்து அறிவுரை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் எதிர்மனுதாரரான M/s R.S. Food & Beverages நிறுவனத்தின் உரிமையாளரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர், செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, செந்தில் நகர், வரதப்பிள்ளை தெரு, கதவு எண்.109/1, என்ற முகவரியில் உள்ள AVM Aqua (Packaged Drinking Water) R.S. Food & Beverages என்ற வணிக நிறுவனம் குறித்து அளித்த புகார் தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம், 2014, பிரிவு 12(d)–ன்படி கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது:

(i) குரோம்பேட்டையில் உள்ள அருள்முருகன் ராமமூர்த்தி நகர் குடியிருப்பாளர்கள் பகுதியில் தண்ணீர் லாரிகள் வேகமாகச் செல்வதைத் தடுக்க, சாலையில் வேகத்தடைகள் அமைத்து, அந்தப் பகுதியில் செல்லும் வாகனங்களின் வேகத்தைக் குறைப்பதின் மூலம் அப்பகுதியின் சாலையில் செல்பவர்களுக்கான பாதுகாப்பை மேம்படுத்துதல்;

(ii) மேற்கண்ட பகுதியில் உள்ள சேதமடைந்த சாலைகளை தரமான சாலைகளாக அமைத்தல்;

(iii) மேற்கண்ட பகுதியில் உள்ள சாலைகளிலுள்ள சாக்கடையின் உடைந்த மேல்மூடிகளை புதியதாக பொருத்துதல்;

(iv) மேற்கண்ட பகுதியில் உள்ள தண்ணீர் லாரிகளால் ஏற்படும் ஒலி மற்றும் மாசு தொடர்பாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்துடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுத்தல்; மற்றும்

(v) மேற்கண்ட நிறுவனத்திற்கு வந்து செல்லும் வாகன ஓட்டுநர்களுக்கு காவல் துறையுடன் கலந்தாலோசித்து பொதுமக்களின் பாதுகாப்பு குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. L. ரவிச்சந்திரன்,
கதவு எண் 1B, 3வது குறுக்குத் தெரு,
2வது மெயின் ரோடு,
அருள்முருகன் ராமமூர்த்தி நகர்,
குரோம்பேட்டை, சென்னை–600 044.

2) திருமதி சங்கீதா ரமேஷ்,
உரிமையாளர், M/s R.S. Food & Beverages,
கதவு எண் 109/1, வரதப்பிள்ளை தெரு,
செந்தில் நகர், நெமிலிச்சேரி,
குரோம்பேட்டை, சென்னை–600 044.

3) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி, தாம்பரம்.

4) உதவி ஆணையர், மண்டலம் 3,
தாம்பரம் மாநகராட்சி, சென்னை–600 073.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

6) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

15/7/25
செயலாளர்.